(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. **173**.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2017 யூன் 20, செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ கரு ஜயசூரிய,** சபாநாயகர்

**கௌரவ திலங்க சுமதிபால,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ ரணில் விக்கிரமசிங்க,** பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்

**கௌரவ (திருமதி) தலதா அதுகோரல,** வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம,** விசேட பணிப்பொறுப்புக்களுக்கான அமைச்சர்

**கௌரவ கயந்த கருணாதிலக்க,** காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசானும்

**கௌரவ அகில விராஜ் காரியவசம்,** கல்வி அமைச்சர்

**கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,** உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

**கௌரவ தயா கமகே,** ஆரம்பக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ தயாசிறி ஜயசேகர,** விளையாட்டுத்துறை அமைச்சர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. நாவின்ன,** உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,** வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சர்

**கௌரவ றிஸாட் பதியுதீன்,** கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ திலக் மாரபன,** அபிவிருத்திப் பணிப்பொறுப்புகள் அமைச்சர்

**கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா,** அனர்த்த முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ சாகல ரத்நாயக்க,** சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) விஜயதாஸ ராஜபக்ஷ,** நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்

**கௌரவ சந்திம வீரக்கொடி,** திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சர்

**கௌரவ மலிக் சமரவிக்ரம,** அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்

**கௌரவ மங்கள சமரவீர,** நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்

**கௌரவ ரஊப் ஹகீம்,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர்

**கௌரவ அப்துல் ஹலீம்,** தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா,** பிரதேச அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ வசந்த அலுவிஹாரே,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிரோஷன் பெரேரா,** தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பாலித ரங்கே பண்டார,** நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) விஜயகலா மகேஸ்வரன்,** சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இரான் விக்கிரமரத்ன,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ திலிப் வெதஆரச்சி,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சுஜீவ சேனசிங்க,** சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் செனெவிரத்ன,** விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வசந்த சேணாநாயக்க,** வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. எச். எம். பௌஸி,** தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக் அபேசிங்க,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ லஸந்த அலகியவன்ன,** நிதி மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

**கௌரவ பைஸால் காசிம்,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பிரதி அமைச்சர்

**கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன,** வலுவாதார அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ பாலித குமார தெவரப்பெரும,** உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,** தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ எச்.ஆர். சாரதீ துஷ்மந்த,** நீதி பிரதி அமைச்சரும் புத்தசாசன பிரதி அமைச்சரும்

**கௌரவ மனுஷ நாணாயக்கார,** வெளிநாட்டு தொழில்வாய்ப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ கருணாரத்ன பரணவிதான,** திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி பிரதி அமைச்சர்

**கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,** பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் வசந்த பெரேரா,** பெருந்தோட்ட கைத்தொழில் பிரதி அமைச்சர்

**கௌரவ இந்திக பண்டாரநாயக்க,** வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரதி அமைச்சர்

**கௌரவ ரன்ஜன் ராமநாயக்க,** சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ துலீப் விஜேசேகர,** தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ அமீர் அலி சிஹாப்தீன்,** கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர்

---

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன**

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன**

**கௌரவ சிசிர குமார அபேசேகர**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ ஆனந்த அலுத்கமகே**

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே**

**கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே**

**கௌரவ அ. அரவிந்த் குமார்**

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி**

**கௌரவ வேலு குமார்**

**கௌரவ நாலக்க பிரசாத் கொலொன்னே**

**கௌரவ சந்திரசிறி கஜதீர**

**கௌரவ சந்திம கமகே**

**கௌரவ உதய பிரபாத் கம்மன்பில**

**கௌரவ நிஹால் கலப்பத்தி**

**கௌரவ தினேஷ் குணவர்தன**

**கௌரவ பந்துல குணவர்தன**

**கௌரவ எட்வட் குணசேகர**

**கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர**

**கௌரவ எஸ். எம். சந்திரசேன**

**கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ**

**கௌரவ நலின் பண்டார ஜயமஹ**

**கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன**

**கௌரவ பியங்கர ஜயரத்ன**

**கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன**

**கௌரவ லக்கி ஜயவர்தன**

**கௌரவ மயில்வாகனம் திலகராஜா**

**கௌரவ க. துரைரெட்ணசிங்கம்**

**கௌரவ எம்.எஸ். தௌபீக்**

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா**

**கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா**

**கௌரவ ரீ. ரன்ஜித் த சொய்சா**

**கௌரவ அநுர திசாநாயக்க**

**கௌரவ மயந்த திசாநாயக்க**

**கௌரவ விமலவீர திசாநாயக்க**

**கௌரவ வீரகுமார திசாநாயக்க**

**கௌரவ சாலிந்த திசாநாயக்க**

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா**

**கௌரவ முஹமட் நவவி**

**கௌரவ வாசுதேவ நாணாயக்கார**

**கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்**

**கௌரவ புத்திக பத்திறண**

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண**

**கௌரவ கே.கே. பியதாஸ**

**கௌரவ சனத் நிசாந்த பெரேரா**

**கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா**

**கௌரவ அசோக்க பிரியந்த**

**கௌரவ பந்துல லால் பண்டாரிகொட**

**கௌரவ தாரக்க பாலசூரிய**

**கௌரவ விஜித பேருகொட**

**கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா**

**கௌரவ கே. காதர் மஸ்தான்**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ அப்துல்லா மஹரூப்**

**கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க**

**கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரண**

**கௌரவ பிமல் ரத்நாயக்க**

**கௌரவ சீ. பீ. ரத்நாயக்க**

**கௌரவ பிரசன்ன ரணதுங்க**

**கௌரவ பிரசன்ன ரணவீர**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ ஹர்ஷண ராஜகருணா**

**கௌரவ சமல் ராஜபக்ஷ**

**கௌரவ அங்கஜன் இராமநாதன்**

**கௌரவ காமினி லொக்குகே**

**கௌரவ ஜானக வக்கும்புர**

**கௌரவ (திருமதி) பவித்திராதேவி வன்னிஆரச்சி**

**கௌரவ விதுற விக்கிரமநாயக்க**

**கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன**

**கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன**

**கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன**

**கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ கஞ்சன விஜேசேகர**

**கௌரவ ஹேஷான் விதானகே**

**கௌரவ தேனுக விதானகமகே**

**கௌரவ குமார வெல்கம**

**கௌரவ சி. சிறீதரன்**

**கௌரவ (திருமதி) சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ சந்தித் சமரசிங்க**

**கௌரவ ராஜவரோதயம் சம்பந்தன்,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ ஈ. சரவணபவன்**

**கௌரவ முத்து சிவலிங்கம்**

**கௌரவ அண்ணாமலை நடேசு சிவசக்தி**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ செஹான் சேமசிங்க**

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி**

**கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்**

**கௌரவ கனக ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. பத்திரங்கள் சமர்ப்பணம்:** (1) சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 41ஆ (6) மற்றும் 153 (ஏ) உறுப்புரைகளின் பிரகாரம், 2017.01.01 முதல் 2017.03.31 வரையிலான கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் செயலாற்றுகை அறிக்கையை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை வலுவாதார அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்,

(i) 2016 ஆம் ஆண்டுக்கான வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை;

(ii) 2016 ஆம் ஆண்டுக்கான முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை;

(iii) 2016 ஆம் ஆண்டுக்கான நிதி அமைச்சின் ஆண்டறிக்கை;

(iv) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழான விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 மார்ச்சு 28 ஆம் திகதிய 2012/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(v) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 மார்ச்சு 28 ஆம் திகதிய 2012/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(vi) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 மார்ச்சு 31 ஆம் திகதிய 2012/52 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(vii) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 மே 08 ஆம் திகதிய 2018/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(viii) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 மே 19 ஆம் திகதிய 2019/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை; மற்றும்

(ix) (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதி தீர்வைகள் தொடர்பான தீர்மானம்.

(2017 பெப்ரவரி 16 ஆம் திகதிய 2006/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

ஆகியவற்றைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கைகள், கட்டளைகள் மற்றும் தீர்மானம் அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான இலங்கைப் பாராளுமன்றத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் உணர்வழிவியல் துறையை உணர்வழிவியல் மற்றும் அதிதீவிர சிகிச்சைத்துறையாகப் பெயர் திருத்தஞ் செய்து விதிக்கப்பட்டு, 2016 ஒற்றோபர் 26 ஆம் திகதிய 1990/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையைச் சமர்ப்பித்து மேற்படிக் கட்டளையை கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்,

(i) 2016 ஆம் ஆண்டுக்கான புத்தளம் மாவட்டச் செயலகத்தின் வருடாந்த செயலாற்றுகை மற்றும் கணக்குகள்;

(ii) 2016 ஆம் ஆண்டுக்கான திருகோணமலை மாவட்டச் செயலகத்தின் செயற்திறன் பெறுபேற்று அறிக்கையும் கணக்கும்; மற்றும்

(iii) 2016 ஆம் ஆண்டுக்கான ஹம்பாந்தோட்டை மாவட்டச் செயலகத்தின் செயலாற்றுகை அறிக்கையும் கணக்கும்

ஆகியவற்றைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கைகளை உள்ளக நிருவாகம் மற்றும் அரச முகாமைத்துவம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வருடாந்த செயல்திறன் அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை இளைஞர், விளையாட்டுத்துறை, கலை மற்றும் மரபுரிமைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(8) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான நீர்ப்பாசனம் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சின் வருடாந்த செயற்திறன் அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(9) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான சிறைச்சாலைத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை தேசியப் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(10) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் முன்னேற்ற அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை இளைஞர், விளையாட்டுத்துறை, கலை மற்றும் மரபுரிமைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(11) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**2. குழு அறிக்கைகள் சமர்ப்பணம்:** (1) வலுவாதார அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ (திருமதி) பவித்ராதேவி வன்னிஆரச்சி, வலுவாதார அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, “2015 ஆம் ஆண்டுக்கான வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சின் செயலாற்றுகை அறிக்கை”, “2015 ஆம் ஆண்டுக்கான வனவிலங்குகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை மற்றும் “2015 ஆம் ஆண்டுக்கான தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் வருடாந்த முன்னேற்ற அறிக்கை” தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு உறுப்பினர் கௌரவ பந்துல குணவர்தன, பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, “1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழான கட்டளை”மற்றும் “1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்” தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**3. மனுக்கள் :**

(1) (i) ஹோமாகம, கலவிலவத்த, திஸ்ஸ மாவத்தை, இல. 181/41 இல் வதியும் திருமதி டி.டப்ளியூ.டி. மல்லிகாவினது 2017.05.23 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) அம்பாறை, திஸ்ஸபுர, இல. 78 இல் வதியும் திரு. எச். உபாலி விஜயலத்தினது 2017.05.22 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(iii) ஹொரோபத்தான, திருகோணமலை வீதியில் வதியும் திருமதி எச்.எம். மல்லிகா உபுல்விலவினது 2017.05.22 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ சுசந்த புஞ்சிநிலெமே சமர்ப்பித்தார்.

(2) குருணாகல், கங்கொட வீதி, இல. 86 இல் வதியும் திரு. ஈ.எம். ஜயரத்னவினது 2017.04.27 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ அசோக் அபேசிங்க சமர்ப்பித்தார்.

(3) இத்தேபான, கலதர, கம்மல்தூவவில் வதியும் திருமதி கே.யூ. வினீதா இந்திரானியினது 2017.04.27 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ பாலித குமார தெவரப்பெரும சமர்ப்பித்தார்.

(4) மாம்பே, பிலியந்தலை, மஹரகம வீதி, சமகி மாவத்தை, இல. 73 இல் வதியும் செல்வி ஈ.டி.ஐ. துல்ரிக்ஷியினது 2017.05.19 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ காமினி லொக்குகே சமர்ப்பித்தார்.

(5) கொழும்பு 01, துறைமுக மற்றும் கடற்படை அலுவல்கள் அமைச்சில் பணிபுரியும் திரு. கே.பீ. சிரிசோமவினது 2017.01.27 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ சமர்ப்பித்தார்.

(6) (i) கஹதுவ, வாடுவெலிபிட்டிய வடக்கு, நந்தன எனும் முகவரியில் வதியும் திரு. எஸ்.எச்.கே. நந்தசேனவினது 2017.04.25 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) வந்துரம்ப, பொல்கஹவிலவில் வதியும் திரு. பி.கே.எஸ். கமரத்னவினது 2017.03.26 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ பந்துல லால் பண்டாரிகொட சமர்ப்பித்தார்.

(7) (i) வேபட, வேபட கிழக்கு, இல. 04 இல் வதியும் திருமதி கே.ஏ. நந்தாவதீயினது 2017.03.26 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) வேயன்கொட, மாளிகாதென்ன, இல. 319 இல் வதியும் திரு. வை.எல்.பி. பீரிஸினது 2017.04.30 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ ஹர்ஷண ராஜகருணா சமர்ப்பித்தார்.

25அ ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய மேற்படி மனுக்கள் பொது மனுக்கள் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

கூட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது

பி.ப. 1.51 மணி

பி.ப. 2.13 மணியாகும் வரை கூட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

பி.ப. 2.13 மணி

கூட்டம் மீண்டும் தொடங்கியது சபாநாயகர் தலைமை தாங்கினார்.

கூட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

பி.ப. 2.37 மணி

பி.ப. 2.13 மணியாகும் வரை கூட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

பி.ப. 3.12 மணிக்கு

கூட்டம் மீண்டும் தொடங்கியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.

**4. நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தம்):** நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் அமைச்சர் சார்பாக காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

சட்டமூலம் 2017 யூலை 04 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்பட வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் அச் சட்டமூலம் உரிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**5. உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தம்):** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சார்பாக காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

சட்டமூலம் 2017 யூலை 04 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்பட வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் அச் சட்டமூலம் உரிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**6. சட்டமூலம் கொண்டுவர அனுமதி:** "ஆனந்த அலுத்கமகே அபிவிருத்தி, சமூக சேவைகள், அறக்கட்டளை மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்" எனும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ சிசிர குமார அபேசேகர பிரேரித்தார். கௌரவ ஆனந்த அழுத்கமகே அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

47 (5) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**7. சட்டமூலம் கொண்டுவர அனுமதி:** "சாந்த அபேசேகர அபிவிருத்தி, சமூக சேவைகள் அறக்கட்டளை மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்" எனும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ ஆனந்த அலுத்கமகே பிரேரித்தார். கௌரவ சிசிர குமார அபேசேகர அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

47 (5) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**8. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை:** அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ், செஸ் வரி தொடர்பில் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 மாச்சு 21 ஆம் திகதிய 2011/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(பி.ப. 3.35 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார். )

“கௌரவ எட்வட் குணசேகர தலைமை தாங்குவாராக” என ஆரம்பக் கைத்தொழில்கள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.45 மணிக்கு கௌரவ எட்வட் குணசேகர தலைமை தாங்கினார்.)

“கௌரவ லக்கி ஜயவர்தன தலைமை தாங்குவாராக” என வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 5.55 மணிக்கு கௌரவ லக்கி ஜயவர்தன தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்**,— அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் சார்பாக காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களின் மூலம் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆவது உப பிரிவுடனும் 14 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆம் பிரிவின் கீழ், அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 மே 19 ஆம் திகதிய 2019/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.06.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**10. ஒத்திவைப்பு :** அவ்வேளை நேரம் பி.ப. 6.30 மணியாகிவிடவே தலைமை தாங்கும் உறுப்பினர் வினாவின்றி பாராளுமன்றத்தை ஒத்திவைத்தார்.

பாராளுமன்றம் அதன் பிரகாரம் 2017 யூன் மாதம் 21 ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 1.00 வரை ஒத்திவைக்கப்பட்டது.